**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 6 ஜுன் 2017

Nestlé
Good Food, Good Life

## 20,000 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு பாற்பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளை நெஸ்லே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றது

*உலக பால் தினத்தைக் கொண்டாடும் வகையில் சீப்புக்குளம பால் குளிரூட்டல் நிலையத்தின் மேம்பாட்டுப் பணிகள்*

நெஸ்லே நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டுள்ள வட மத்திய மாகாணத்தின் சீப்புக்குளம என்ற இடத்திலுள்ள பால் குளிரூட்டல் நிலையத்தின் மூலம், பாற்பண்ணையாளர்கள் பயனடையவுள்ளதுடன், இதன் மூலமாக அவர்கள் தமது பாலை விற்பனை செய்வதற்கு அதிகரித்த வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன. நாட்டிலே தனியார் துறை மத்தியில் மிக அதிகளவான பாலைச் சேகரித்து வருகின்ற நிறுவனமாக நெஸ்லே திகழ்ந்து வருகின்றது. உள்நாட்டிலுள்ள பாற்பண்ணையாளர்களிடமிருந்து பாலைக் சேகரித்தமைக்கான கொடுப்பனவாக கடந்து மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூபா 10.5 பில்லியனுக்கும் அதிகமான தொகையை அது வழங்கியுள்ளது.

உலக பால் தினத்தைக் கொண்டாடும் வகையில், அத்தினத்தன்று, மேம்படுத்தப்பட்ட இந்த பால் குளிரூட்டல் நிலையத்தை கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன் அவர்கள் திறந்து வைத்திருந்தார். மேம்படுத்தப்பட்ட குளிரூட்டல், மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகள் மூலமாக அப்பிரதேசத்திலுள்ள 300 வரையான பாற்பண்ணையாளர்கள் பயன்பெறவுள்ளதுடன், அவர்கள் அதிகமான அளவில் பாலை விற்பனை செய்து, நெஸ்லே நிறுவனம், பாலை மூலமாகக் கொண்ட பரந்த வகைப்பட்ட தனது உற்பத்திகளை தயாரிப்பதற்காக, குருணாகலிலுள்ள நெஸ்லே தொழிற்சாலைக்கு பாலை எடுத்துச் செல்லும் வரை அதன் நலம் குன்றாது புத்தம்புதிதாக வைத்துப் பேண இடமளிக்கின்றது.

ஒரு சர்வதேச உணவு என்ற வகையில் பாலின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையின், உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் உலக பால் தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன் அவர்கள் கூறுகையில், *"பாலை மூலமாகக் கொண்ட உற்பத்திகள் ஆரோக்கியத்திற்கான ஒரு அத்திவாரம் எனப் பரவலாகக் கருதப்படுகின்ற நிலையில், தற்போது இடம்பெறும் பால் விநியோகம், நுகர்வோரின் ஒட்டுமொத்த தேவைகளையும் ஈடுசெய்வதற்குப் போதுமானதல்ல. பாலுற்பத்தித் தொழிற்துறையைப் பொறுத்தவரையில் பாரிய வளர்ச்சி வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், இலங்கை தனது உள்நாட்டு பால் தேவையில் தன்னிறைவு காண்பதற்கு உதவும் முகமாக, நாம் கடந்த காலங்களில் அயராது உழைத்து வந்துள்ளோம். எமது முயற்சிகளுக்கு உதவுவதில் தனியார் துறையில் எமது பழம்பெரும் பங்காளராக நெஸ்லே நிறுவனம் திகழ்ந்து வருவதுடன், பயிற்சி மற்றும் மேம்பாடு, பாற்பண்ணையாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்த பாலுக்கான கொடுப்பனவு ஆகியவற்றிற்கு ஆண்டுதோறும் பல பில்லியன் கணக்கான தொகையை முதலிட்டு வருகின்றது. நெஸ்லே நிறுவனம் தனது உற்பத்திகளுக்கு உள்நாட்டிலிருந்து சேகரிக்கப்படும் பாலை உபயோகிப்பதை நான் நேரிடையாகக் கண்டுள்ளதுடன், பாலுற்பத்தித் தொழிற்துறை மற்றும் உள்நாட்டு சமூகத்தின் நலனுக்கு அதன் ஆதரவை தொடர்ந்தும் எதிர்பார்த்துள்ளேன்,"* என்று குறிப்பிட்டார்.

பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்ய உதவும் முகமாக 1980 களின் ஆரம்பத்திலிருந்தே நெஸ்லே நிறுவனம் உள்நாட்டு அதிகார சபைகளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வந்துள்ளதுடன், உட்கட்டமைப்பு, பாற்பண்ணை பயிற்சி மற்றும் வளங்கள், கால்நடை சேவைகள், நுண்கடன் உதவி மற்றும் உற்பத்தியின் அளவை அதிகரித்தல் போன்றவற்றிற்கு ஒவ்வொரு ஆண்டும் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆண்டில் 'Nestle Kiri Govi Diriya' என்ற செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தி, உள்நாட்டு பாற்பண்ணையாளர்களை அபிவிருத்தி செய்வதன் மீது அது கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த செயற்திட்டத்தின் கீழ், பால் கறவை உபகரணங்கள், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பான பயிற்சி மூலமாக 3,000 இற்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்கள் பலனடைந்துள்ளனர்.

பால் விநியோகத்தை அதிகரித்து, உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு நிலைபேற்றியல் கொண்ட வாழ்வாதாரத்தை வழங்குவது மட்டுமன்றி, பாலை உட்கொள்வதை அதிகரிக்கச் செய்வதற்கு சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கும் இதன் மூலமாக உதவ முடியுமென நெஸ்லே நம்புகின்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *"ஊட்டச்சத்து மற்றும் நலச்செழுமை ஆகியன எப்போதும் நெஸ்லே உற்பத்திகளின் மையப்பொருளாக காணப்படுவதுடன், இந்த முயற்சியில் பால் என்பது எப்போதும் ஒரு முக்கிய அங்கமாகவே காணப்படுகின்றது. இயற்கையாகவே கல்சியத்தின் செழுமை நிரம்பிய பால், நுண்ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கான சிறந்த ஒரு காவியாகவும் உள்ளமையால், சனத்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு நீண்ட கால அடிப்படையில் அதிக ஊட்டச்சத்தை வழங்குவதற்கு உகந்த ஒரு வழிமுறையாகக் காணப்படுகின்றது. விநியோகத்தை அதிகரிப்பதற்கு எமது பாற்பண்ணையாளர்களுக்கு உதவுவதன் மூலமாக, கிராமப்புற வாழ்வாதாரத்திற்கு நாம் உதவுவது மட்டுமன்றி, ஊட்டச்சத்து செழுமை நிரம்பிய பால் உற்பத்திகள் மற்றும் அற்புதமான சுவை கொண்ட பால் உணவுப்பண்டங்கள் மூலமாக எமது நுகர்வோர் மத்தியில் பாலின் நுகர்வை அதிகரிப்பதற்கும் உதவுகின்றோம்,"* என்று குறிப்பிட்டார்.

*Nespray Everyday, Nespray Fortigrow, Nespray Nutri-Up* Ready-To-Drink *மற்றும்* *Milo* Ready-To-Drink போன்ற பாலை மூலமாகக் கொண்ட நெஸ்லே உற்பத்திகள் நுகர்வோரின் சுவை மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை ஈடுசெய்யும் வகையில் விசேடமாக தயாரிக்கப்படுகின்றன. நாட்டில் நிலவுகின்ற நுண்ஊட்டச்சத்து குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக இரும்புச்சத்து, விட்டமின் A மற்றும் ஏனைய உகந்த நுண்ஊட்டச்சத்துக்களின் செழுமையை இந்த உற்பத்திகள் கொண்டுள்ளன. குறைந்த வருமானத்தைக் கொண்டுள்ள பிரிவினருக்கும் இந்த உற்பத்திகள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் வகையில், கட்டுபடியாகும் வடிவங்களில் மேற்குறிப்பிட்ட பால் உற்பத்திகளை நெஸ்லே வழங்கி வருகின்றது. அதன் ஏனைய உற்பத்திகளான *Milkmaid* Sweetened Condensed Milk, *Nestomalt* Ready-To-Drink மற்றும் *Nescafé* Ready-To-Drink ஆகியன பாலின் நுகர்வினை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற நாட்டின் குறிக்கோளுக்கு உதவுகின்றன.

கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்த உதவுதல், மேம்பாட்டை அபிவிருத்தி செய்தல், சமூகங்களின் மீள்எழுச்சி, வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களித்தல் போன்ற நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பில் நெஸ்லே மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.